# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 வைகாசி 01 ஞாயிற்றுக்கிழமை (14-05-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:145


## மௌனம் தொடர்ந்தால் நாடு அழிவது நிச்சயம்

# இப்போதாவது புலிகளுடன் பேசுங்கள்!

# ஜனாதிபதிக்கு ரணில் அவசர கடிதம்

## இதுகுறித்து நேரில் பேச விரும்புவதாகவும் தெரிவிப்பு

கொழும்பு,மே14

**"யாழ். நகரைக் கைப்பற்றும் முயற்சியில் புலிகள் தொடர்ந்து முன்னேறிக்கொண்டிருக்கிறார்கள். நகரிலிருந்து சில மைல் தூரத்திலேயே அவர்கள் உள்ளனர். இந்நிலையிலாவது யதார்த்தத்தை ஒப்புக்கொண்டு உண்மையாக நடவுங்கள். இப்போதாவது புலிகளுடன் பேச முன்வாருங்கள். இது விடயத்தில் நீங்கள் தொடர்ந்தும் மௌனம் சாதிப்பீரகளேயானால் அது நாட்டை அழிவுப்பாதைக்கே இட்டுச் செல்லும்."**

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பி வைத்த அவசரக் கடிதத்தில் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

"யாழ்ப்பாணத்துக்குச் சேவையில் ஈடுபடப் போதியளவு கப்பல்கள், விமானங்கள் மற்றும் போக்குவரத்துச் சாதனங்கள் அரசிடம் உள்ளன என்று கூறுகின்றீர்கள். அவை குறித்தும் வடபகுதியில் பொதுமக்களுக்கும் படையினருக்கும் உரிய அத்தியாவசியப் பொருள்கள், அடிப்படை வசதிகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பது குறித்தும் தங்களுடன் உடனடியாக - நேரில் - பேசவிரும்புகின்றேன். அதற்கு ஏற்பாடு செய்யுங்கள்" - இப்படித் தமது கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

## கண்ணீர் மல்க ஜனாதிபதி இந்தியத் தளபதியுடன் பேச்சு!

கொழும்பு,மே14

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட இந்திய விமானப் படைத் தளபதி எயர்மாஷல் டிப்னிஷுடன் ஜனாதிபதி சந்திரிகா கலந்துரையாடிய சமயம் ஜனாதிபதி பல தடவை கண்ணீர் மல்க அழுதார் என்று இந்தியப் பத்திரிகையான 'ரைம்ஸ் ஒவ் இந்தியா' தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த வாரம் இலங்கை வந்திருந்த டிப்னிஷ் ஜனாதிபதியை அலரிமாளிகையில் சந்தித்து ஒரு மணிநேரம் கலந்துரையாடினார்.

நாட்டின் தற்போதைய யுத்த நிலைமை குறித்து மிகுந்த கவலையுடன் இந்திய விமானப்படைத் தளபதிக்கு எடுத்துரைத்த ஜனாதிபதி இடையிடையே பல தடவைகள் கண்ணீர் மல்கி அழுதார்.

- இப்படி "கண்ணீர்ப் பேச்சு" (TEAR TALKS) என்ற தலைப்பில் அப்பத்திரிகை வெளியிட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

## நகரில் நேற்று முற்பகல் மக்கள் நடமாட அனுமதி

யாழ்ப்பாணம்,மே14

யாழ் மாநகரசபை மற்றும் சாவகச்சேரி பிரதேசசபைப் பகுதிகளில் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் ஊரடங்கு தளர்த்தப்பட்டதான உத்தியோகபூர்வ அறிவிப்பு எதனையும் பலாலியில் உள்ள வடபகுதி இராணுவத் தலைமையகம் நேற்று வெளியிடாத போதிலும் -

யாழ். மாநகரசபைப் பிரதேசத்தில் காலை 10 மணி முதல் 12.30 மணி வரை சுமார் இரண்டரை மணி நேரம் மக்கள் தாராளமாக நடமாட அனுமதிக்கப்பட்டனர்.

யாழ்.நகரப் பிரதேச இராணுவத் தலைமைப் பிரிவு இதற்கான அனுமதியை வழங்கியதாகத் தெரிகின்றது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## அமெ., இந்தியா ஒப்புதலுடனேயே இலங்கைக்கு கிபிர் விற்கப்பட்டது

கொழும்பு,மே14

இலங்கைக்கு 'கிபிர்' ரகத்தைச் சேர்ந்த ஏழு குண்டுவீச்சு விமானங்களை விற்பனை செய்வது தொடர்பான உடன்பாட்டில் கைச்சாத்திட முன்னர் இஸ்ரேல் அது தொடர்பாக அமெரிக்காவுடனும் இந்தியாவுடனும் தொடர்புகொண்டு அதற்கான ஒப்புதலைப் பெற்றுக்கொண்டது.

'இந்துஸ்தான் ரைம்ஸ்' பத்திரிகை இவ்வாறு தகவல் வெளியிட்டுள்ளது. (உ-3)

## இந்தியாவில் புலிகள் மீதான தடை மேலும் இரு வருடங்களுக்கு நீடிப்பு

புதுடில்லி,மே14

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை இந்திய அரசு நேற்று முன்தினம் முதல் மீண்டும் இரு வருடங்களுக்கு நீடித்துள்ளது.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலையை அடுத்து விடுதலைப் புலிகள் மீது இந்திய அரசாங்கத்தினால் தடை விதிக்கப்பட்டது.

இத்தடை உத்தரவு இரு வருடங்களுக்கு ஒருமுறை நீடிக்கப்பட்டு வந்தது. கடைசி உத்தரவு இன்றுடன் காலாவதியாக இருந்த சமயம் அது தற்போது மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

தமிழீழம் உருவாகுவதற்கான நடவடிக்கைகளில் தொடர்ந்து புலிகள் ஈடுபட்டு வருவது ஆவணங்களில் தெரியவந்துள்ளதாகவும் -

அத்தகைய நடவடிக்கைகள் இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக அமையும் என்பதால் விடுதலைப் புலிகள் மீதான தடை நீடிக்கப்படுவதாகவும் -

இந்திய அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம்பெற்றுள்ள தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க. போன்றவை இலங்கையில் தமிழீழம் அமைவதை ஆதரித்து கருத்து வெளியிட்டுள்ள போதிலும் -

ம.தி.மு.க., பா.ம.க. போன்றவை விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படவேண்டும் என கோரிக்கை விடுத்து வந்துள்ளபோதிலும் -

புலிகள் மீதான தடை நீடிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-5-4-8)

### தளுவத்த பலாலி விஜயம்

கூட்டுப்படைத் தளகர்த்தர் ஜெனரல் ரோஹான் தளுவத்த நேற்று முன்தினம் பலாலிக்கு விஜயம் மேற்கொண்டு வடக்கு யுத்த நிலைமை குறித்துப் படை அதிகாரிகளுடன் ஆராய்ந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

அன்றே கொழும்பு திரும்பிய அவர் ஜனாதிபதியைச் சந்தித்து யுத்த நிலைமை குறித்து எடுத்துக் கூறியதாக அறியவந்தது. (உ-3-164)

### பாக்.மறுப்பு

இலங்கைக்கு இராணுவத் தளபாடங்கள், ஆயுதங்கள் போன்றவற்றை பாகிஸ்தான் வழங்கியுள்ளதாக வெளியான செய்திகளை இஸ்லாமாபாத்தில் பாகிஸ்தான் அதிகாரி ஒருவர் மறுத்தார். (உ)

### தமிழ்க் கட்சிகள் வெளியேற முடிவு?

யாழ்.குடாநாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள யுத்த நெருக்கடிகளை அடுத்து தமிழ்க் கட்சிகள் சில குடாநாட்டை விட்டு வெளியேறத் தீர்மானித்துவிட்டதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று நேற்றுத் தெரிவித்தது. (உ-8)

### சென்ஜோன்ஸில் வீழ்ந்த ஷெல்கள்

சென்ஜோன்ஸ் கல்லூரிப் பகுதியில் நேற்றுக் காலை மூன்று ஷெல்கள் வீழ்ந்தன. இந்த ஷெல்களில் இரண்டு வெடித்தன என்றும், மற்றையது வெடிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

### நாவற்குழியில் ஷெல்லினால் ஐந்து பேர் காயம்

நாவற்குழிப் பகுதியில் நேற்று முன்தினம் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் காயமடைந்த ஐவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு நேற்று மாலை யாழ்.ஆஸ்பத்திரிக்கு அவர்கள் கொண்டுவரப்பட்டனர்.

என்.கமலரூபன் (வயது16), என். சிறீராஜ் (வயது13), எஸ். சுசிந்தன் (வயது17), எஸ்.மகேஸ்வரி (வயது 57), எஸ்.பரமேஸ்வரி(வயது47) ஆகியோரே அந்த ஐவருமாவர் (உ-3-5)

## சண்டையில் மந்த நிலை!

யாழ்ப்பாணம்,மே14

அரியாலை, கொழும்புத்துறைப் பகுதிவரை முன்னேறியுள்ள விடுதலைப் புலிகளுக்கும் அரசுப் படைகளுக்கும் இடையில் கடந்த சில நாள்களாக இடம்பெற்றுவந்த உக்கிர யுத்தம் நேற்றுப் பகல் தணிந்திருந்தது.

நேற்றுப் பகல் முழுவதும் அரசுத் துருப்புக்கள் ஷெல், பீரங்கித் தாக்குதலில் ஈடுபட்டன.

எனினும் நேற்று இரவு யுத்தம் தீவிரமடைந்தது. கைதடி - கோப்பாய் வெளிகளை அண்டிய பிரதேசங்களிலும், அரியாலையை அண்டிய பகுதிகளிலும் வேட்டுச் சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன.

புலிகளின் தாக்குதல் முயற்சிகள் பலவற்றைத் தாங்கள் முறியடித்துவிட்டதாக அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

யாழ். நகரைக் கைப்பற்றுவதற்கான இறுதிக்கட்டத் தாக்குதலுக்குத் தாங்கள் தயாராகி வருவதாகப் புலிகள் அறிவித்துள்ளனர். (உ)

### இனப்பிரச்சினை நெருக்கடி

## இலங்கை ~ இந்தியா ~ நோர்வே முத்தரப்புடனும் அமெரிக்கா பேச்சு

புதுடில்லி,மே14

இலங்கை இனப்பிரச்சினையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கு அரசியல் தீர்வுகாணும் வழிமுறைகள் குறித்து அமெரிக்க அரசு இலங்கை, இந்தியா, நோர்வே ஆகிய நாடுகளின் அரசுகளுடன் அடிக்கடி தொடர்புகொண்டு ஆராய்ந்து வருவதாக அந்த நாட்டின் ராஜாங்க அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த விடயத்தில் மத்தியஸ்தம் செய்வதற்கான முன்முயற்சிகளை மேற்கொள்ளும்படி நோர்வே அரசை ஊக்கப்படுத்தும் நடவடிக்கைகளை அமெரிக்கா எடுத்துள்ளது என்றும்-

விரைவாக இரு தரப்புக்களுடனும் பேச்சுவார்த்தை மேற்கொள்ளும்படி நோர்வே கேட்கப்பட்டுள்ளது என்றும் -

அமெரிக்க ராஜாங்க அமைச்சு தெரிவித்ததாக இந்தியச் செய்திகள் தெரிவித்தன. (உ-3)

## இணுவில் காரைக்காலில் சிப்பாய் சூட்டுக்குப் பலி!

யாழ்ப்பாணம்,மே14

இணுவில் காரைக்கால் பகுதியில் நேற்று முற்பகல் 11.45 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார் எனவும், இரு சிப்பாய்கள் காயமடைந்தனர் எனவும் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தை அடுத்து அந்தப் பகுதி படையினரால் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் இடம்பெற்றது.

அதேசமயம் -

கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் உள்ள வீடு ஒன்றை நேற்று முன்தினம் படையினர் சுற்றிவளைத்தனர் என்றும் -

அந்த வீட்டிலிருந்த ஒன்பது இளைஞர்களின் அடையாள அட்டைகளைப் படையினர் வாங்கிச் சென்றனர் என்றும் - கூறப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### கல்வி

O/L கணிதம் ஆரம்ப அறிவிலிருந்து 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். மற்றும் ஆண்டு 6 இலிருந்து O/L வரை சகல பாடங்களும் தனிப்பட்ட முறையில் விசேடமாகக் கற்பிக்கப்படும். க.ஆறுமுகநாதன், 10,கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (76072)

### இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி(Broiler), கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல.15, 6ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (76112)

இறைச்சிக்கோழி(Broiler) மற்றும் கல்பேட்ஸ், சேவல், விறாத்துக் குஞ்சு என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல68, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். (76054)

இறைச்சிக்கோழி, புறொயிலர் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சில்லறை விலை 1Kg. 150/-. இலவசமாகச் சுத்தம் செய்து தரப்படும். தொடர்பு:- இல.31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (76102)

Broiler, Cullbirds, Cockerels இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். குறைந்த விலை, நுட்பமான நிறுவை. இல.19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (76096)

இறைச்சிக்கோழி புறொயிலர், விறாத்து, கல்பேட்ஸ்(பாதிக்கோழி உட்பட) தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். நியாயமான விலை, நுட்பமான நிறுவை, சுறுசுறுப்பான சேவை. 1Kg. 150/-. தொடர்பு:- அப்பன் (யாழ்.மீன்சந்தை முன்பாக) (76121)

## செம்மணி வழக்கு கொழும்புக்கு

செம்மணிப்புதைகுழி விவகாரம் தொடர்பாக 4 படை அதிகாரிகளுக்கும் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவருக்கும் எதிரான வழக்கு யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் இருந்து. கொழும்பு நீதிவான் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான உத்தரவை மேன் முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் வழங்கியது.

இந்த வழக்கின் சந்தேக நபரான உதயகுமார என்பவர் தாக்கல் செய்த மனு மீதே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

(உ-3-4)

## தெற்கில் வதந்தி பரப்பிய ஐவர் கைது

கொழும்பு,மே14

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக வதந்தி பரப்பிய ஐவர் தெற்கில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பில் மூவரையும் களுத்துறையில் இருவரையும் கைது செய்துள்ளதாகப் பொலீஸார் தெரிவித்தனர். (உ-3-4)

## கொழும்பில் சடலம் மீட்பு

கொழும்பு,மே14

கொழும்பில் நாடாளுமன்றத்துக்குச் செல்லும் ஸ்ரீஜெயவர்த்தனபுர வீதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் முகம் அடையாளம் காணமுடியாமல் எரிந்த நிலையில் இளைஞன் ஒருவனின் சடலம் அப்பகுதிப் பொலீஸாரால் மீட்கப்பட்டது.

(உ-8-4)

## விமானக் குண்டுவீச்சில் பூநகரியில் ஐவர் பலி

வவுனியா,மே14

பூநகரியில் உள்ள பள்ளிக்குடா பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விமானக் குண்டுவீச்சில் ஐந்து அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டனர். பத்துப் பேர் காயமடைந்தனர்.

ஒரே குடும்பத்தை சேர்ந்த அந்தோனிப்பிள்ளை யோகபாலன்(வயது34), யோகபாலன் நிக்சன் (வயது4), யோகபாலன் நிஷாந்தினி (வயது2) ஆகியோரும், ஐந்து பிள்ளைகளின் தந்தையான வேதநாயகம் சற்குணம்(வயது54), கந்தையா கமலன்(வயது23) ஆகியோரே பலியானவர்கள ஆவர்.

(உ-8-4)

யுத்த நடவடிக்கைகளைப் பாதிக்கும்

## நாடாளுமன்ற உரைகளை பரிசீலிக்கக் குழு நியமனம்

கொழும்பு,மே14

வடக்கில் இடம்பெறும் யுத்த நடவடிக்கைகளைப் பாதிக்கும் வகையில் நாடாளுமன்றத்தில் ஆற்றப்படும் உரைகள் குறித்து ஆராய்ந்து முடிவெடுப்பதற்கு குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் நாடாளுமன்றக் குழுக்களின் தலைவர் ரட்ண சிறி விக்கிரமநாயக்க ஆகியோர் மேற்கொண்ட பரிந்துரைக்கு அமைய இந்தக்குழு அமைக்கப்பட்டது.

ஊடக, தபால் தொலைத்தொடர்பு பிரதி அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா, ஐ.தே.கட்சியின் பிராதான ஒருங்கிணைப்பாளர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார ஆகியோர் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கிறார்கள்.

பிரதிச் சபாநாயகர் நாடாளுமன்றத்தில் இந்தக் குழுவின் விவரத்தை அறிவித்தார். (உ-8-4)

## ராணுவ மருத்துவ சேவையை பலப்படுத்த நடவடிக்கை

கொழும்பு,மே14

தற்பொழுது ஏற்பட்டுள்ள யுத்த சூழ்நிலையை அடுத்து இலங்கை இராணுவத்தின் மருத்துவ சேவைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

சுகாதார அமைச்சில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் இது தொடர்பாக முடிவு செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அடுத்த மூன்று மாதங்களுக்குள் கொழும்பு, அநுராதபுரம், பலாலி ஆகிய இடங்களில் உள்ள ராணுவ வைத்தியசாலைகளுக்கு சுழற்சி முறையில் மருத்துவர்களை அனுப்பிவைப்பதெனவும் -

எந்தவொரு அவசர நிலைமையையும் சமாளிக்கும் வகையில் கொழும்பு தேசிய வைத்தியசாலை, கொழும்பு வடக்கு வைத்தியசாலை போன்றவற்றை தயார் நிலையில் வைத்திருப்பதெனவும் -

45 தாதியர்களை இராணுவ வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைப்பதெனவும் இந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

## சங்கானை ஆஸ்பத்திரிக்கு அதிக அளவில் நோயாளர்கள்

யாழ்ப்பாணம்,மே14

சங்கானை ஆஸ்பத்திரியில் நோயாளர் தொகை அதிகரித்து வருகிறது. தினமும் நூற்றுக்கணக்கான நோயாளர்கள் அங்கு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

யாழ்.நகரில் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருப்பதால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு செல்ல டியாத நோயாளர்கள் இந்த ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்கு சென்றவண்ணம் உள்ளனர்.

சங்கானை ஆஸ்பத்திரியில் ஒரு டாக்டர் மட்டுமே கடமையில் இருப்பதால் பெரும் எண்ணிக்கையான நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு சிரமம் ஏற்பட்டுள்ளது.

நோயாளர் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் மருந்துப் பொருள்களுக்கும் இந்த வைத்தியாசலையில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (உ-5-139)

கடந்த ஒரு மாத காலத்தில்

## வவுனியாவில் 22 பேர் கைது ஆறு பேரைக் காணவில்லை

வவுனியா,மே14

வவுனியாவில் கடந்த ஒரு மாத காலத்துக்குள் படையினர் மற்றும் பொலீஸாரால் 22 பேர் கைது செய்யப்பட்டனர்; ஆறு பேர் காணாமற் போயுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் சிலர் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் வவுனியா நகர்ப்பகுதியில் பத்துப் பேர் கைது செய்யப்பட்டு விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த 8 ஆம் திகதி பத்தினியாள் மகிழங்குளம், சின்னக்குளம் ஆகிய இடங்களில் எட்டுப் பேர் படையினரால் கைதுசெய்யப்பட்டு தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.,

கடந்த வியாழனன்று வவுனியா இடைத் தங்கல் முகாமில் வைத்து ஞானப்பிரகாசம் யோஜனா நிஷாந்தி (வயது20), வைத்திலிங்கம் இலங்கேஸ்வரி(வயது22)ஆகியோர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் தற்போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறார்கள்.

இதே இடத்தில் கடந்த 10 ஆம் திகதி படையினரால் கைது செய்யப்பட்ட இராமலிங்கம் பழனிநாதன், மனோபாலன். மங்கலேஸ்வரன் ஆகியோரும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை-

சின்னையா நவரட்னம் (வயது 50), நவரட்ணம் ராசம்மா(வயது45), நவரட்ணம் சிவகுமார்(வயது27) ஆகியோரும் தர்மேந்திரம் நாகராசா(வயது34),செல்லத்துரை சந்திரசேகரன்(வயது34) ஆகியோருமே வவுனியாவில் காணாமற்போயிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(உ-8-4)

## இடமாற்றப்படும் நோயாளர்கள்

வடமராட்சி,மே14

யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்து தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்ட ஒரு தொகுதி நோயாளர்கள் நேற்று அம்புலன்ஸ் மூலம் மந்திகை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டனர்.

இதேவேளை, பிரசவத்துக்கு காத்திருந்த பத்துத் தாய்மார் ஏற்கனவே யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்து மந்திகைக்கு மாற்றம் செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-5-173)


## வாடிக்கையாளர்களுக்கு மிக அவசரமான வேண்டுகோள்

எம்மிடம் திருத்துவதற்காக பொருள்களைத் தந்த வாடிக்கையாளர்கள் தயவு செய்து அடுத்த ஊரடங்கு தளர்வின்போது தவறாமல் வந்து தங்களது பொருள்களைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

இயக்குநர்
புறோமோட்டோர்ஸ் என்ஜினியரிங் லிமிட்
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(C/12103)


## மருந்து வகைகளுக்கு வன்னியில் தட்டுப்பாடு

வவுனியா,மே14

வன்னியில் தொடர்ச்சியாக நிலவிவரும் மருந்துத் தட்டுப்பாட்டினால் அப்பகுதி ஆஸ்பத்திரிகள் பெரும் நெருக்கடி நிலைமையை எதிர்நோக்குவதாக வன்னிச் செய்திகள் தெரிவித்தன.

தற்போது வன்னியில் நோயாளர் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், அவர்களுக்கு சிகிச்சை வழங்கமுடியாத நிலை தோன்றியுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

மாவட்ட வைத்திய சாலைகளிலும் வெளி நோயாளர் பிரிவுகள் முற்றாக ஸ்தம்பிக்கும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்தனர். (உ-8-4-9)

## சிறுவர்களை அழைத்துச்செல்லக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே.14

திருநெல்வேலி சிறுவர் நிறைவாழ்வு இல்லத்தில் உள்ள சிறுவர்களை அவர்களது பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் வந்து அழைத்துச் செல்லுமாறு சைவ வித்தியா அபிவிருத்திச் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார்.

(உ-8)


## பூப்புனித நீராட்டு விழா பிற்போடப்பட்டுள்ளது


இன்று (14.04.2000) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த

செல்வி கி.சுகன்யாவின்

பூப்புனித நீராட்டு விழா நாட்டுசூழ்நிலை காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளது. திகதி பின்னர் அறிவிக்கப்படும்.
சிரமத்திற்கு மன்னிக்கவும்.

மு. கிருபாலன்
(கிருபா நகை மாளிகை)
(76146)


## 31 ஆம் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



### திருமதி திலகராணி நவரத்தினம்

(14.05.2000)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17-10-1960 | 14-04-2000 |

எங்கள் அன்புத் தெய்வமே
அன்பு என்னும் விளக்கினிலே
அறிவென்னும் சுடர் ஏற்றி
உலகில் எம்மை வாழவைத்து இன்று
மீளாத்துயில் கொண்டது ஏனோ?
உலக வாழ்வில் மீளாத்துயில்
கொண்டாலும் எம் இதயக்
கோயில்களில் என்றும் சுடர் போல
ஒளி வீசிடும் உம்மை என்றும் நாம் மறவோம்

எமது அன்புத் தெய்வம் நோய்வாய்ப்பட்டிருந்த காலத்தில் வைத்திய உதவி புரிந்த வைத்திய கலாநிதிகளுக்கும், அன்பான தாதிமார்களுக்கும் ஏனைய ஊழியருக்கும் அவருக்கு தேவைப்பட்டபோது திடீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவியவர்களுக்கும் அவரின் இறுதிச் சடங்கில் கலந்து உதவியவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று(14.05.2000)ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 11.00 மணிக்கு நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பித்து அன்னாரின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

'திலகவாசம்'
அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

உமது பிரிவால் துயருறும்
**கணவர், மகன்மார்.**

(76097)

## மரண அறிவித்தல்

### ஸ்ரீமதி அமிர்தாம்பிகை அம்மா கோணேஸ்வரக்குருக்கள்

உடுவிலைச் சேர்ந்த ஸ்ரீமதி அமிர்தாம்பிகை அம்மா கோணேஸ்வரக் குருக்கள் 12.05.2000 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்றைய தினமே நடைபெற்றன.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கற்பொக்கணை,
உடுவில்.

தகவல்:
கோ.கோபாலகிருஷ்ண சர்மா
(மகன்)

(C/12104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## கண்டனத்துக்குரியது

உடனடியாக யுத்த நிறுத்தம் ஒன்றைச் செய்து அமைதித் தீர்வுக்கான பேச்சுக்களை ஆரம்பிக்கும்படி அரசையும் விடுதலைப் புலிகளையும் யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகமும் நல்லை ஆதீனக் குருமுதல்வர் சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகளும் பகிரங்கமாகக் கோரியிருக்கின்றார்கள்.

யுத்தத்தினால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள - ஏற்படக் கூடிய - பாதிப்புக்களையும் அவலங்களையும் அவர்கள் விரிவாக எடுத்துரைத்துள்ளனர்

இதேபோன்ற கோரிக்கை ஒன்றை ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் கோபி அனானும் முன்வைத்திருக்கின்றார்.

நடைபெற்றுவரும் யுத்தத்தில் மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் வகையில் நடந்து கொள்வதைத் தவிர்க்கும்படி அவர் அரசாங்கத்தையும் விடுதலைப் புலிகளையும் கோரியிருக்கின்றார்.

தற்போதைய நிலைமை மேலும் தீவிரமடைந்தால் மக்களுக்கு ஏற்படப்போகும் துன்பங்கள் குறித்தும் அவர் கவலை தெரிவித்துள்ளார்.

இதேமாதிரியான கருத்தை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் பிரதிபலித்தார்.

குடாநாட்டில் உள்ள 40ஆயிரம் படையினருக்குத் தேவையானவற்றை வழங்கும் அதேசமயம் குடாநாட்டில் உள்ள ஐந்து லட்சம் மக்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும் அரசு உத்தரவாதம் வழங்கவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

யுத்தத்தில ஈடுபட்டுள்ள இரு தரப்புக்கும் மக்களின் உயிர், உடைமைகளை காப்பாற்றுவதிலும் மதிப்பதிலும் சிரத்தை காட்டப்படவேண்டும் என்று பலரும் வலியுறுத்திக் கூறிவருகின்றார்கள். ஆனால் செயலில் அது மதிக்கப்படுகின்றதா என்றால் இல்லை என்பதே பதில்.

யுத்தபீதிக்குள் சிக்கியிருக்கும் மக்களை ஒரு பிரதேசத்திலிருந்து விருப்பத்துக்கு மாறாக இடம்பெயருமாறு வற்புறுத்துவது அல்லது மிரட்டி இடம்பெயரவைப்பது எவ்வளவு தவறானதோ அதை விட -

யுத்தப்பிரதேசம் எனத் தாம் கருதும் இடத்திலிருந்து வெளியேறி பாதுகாப்பானது என தாம் நம்பும் இடங்களுக்கு தமது உற்றார், உறவினர், உடைமைகளுடன் அவர்கள் செல்வதைத் தடுப்பது மிகமோசமான - பல மடங்கு மோசமான - தவறாகும்.

யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் ஒரு தரப்பு அல்லது இரு தரப்புமே யுத்தத்துக்குள் இடைநடுவில் மக்கள் சிக்காமல் இருப்பதற்காக ஒரு குறிப்பிட்ட பகுதியில் இருந்து வேறு பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயருமாறு மக்களுக்கு முன்கூட்டியே ஆலோசனை சொல்வது தவறல்ல. நிலைமைக்கு ஏற்ப ஆலோசித்து முடிவு செய்வது அவரவரைப் பொறுத்தது. ஆனால் அந்த முடிவை யாரும் பொதுமக்கள் மீது வலிந்து திணிக்கக்கூடாது. அப்படித் திணிக்க முற்பட்டால் அது அப்பட்டமான அடிப்படை உரிமை மீறலாகும்.

அதேபோன்று-

தமது உயிர், உடைமைகளுடன் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற விரும்பும் மக்களை அப்படிச் செய்யவிடாது தடுப்பதும் - அதுவும் போர் நெருக்கடிகளுக்கு மத்தியில் அவ்வாறு தடுப்பது - கண்டிக்கத்தக்கது; அநாகரீகமானது; அது அடிப்படை மனித உரிமைகளை அடியோடு மீறுவது.

பச்சிலைப்பள்ளி - பளையில் இத்தகைய அனுபவம் நேர்ந்தபோது யாழ்ப்பாண சமூகமே ஒன்றுதிரண்டு எதிர்த்துக் கிளர்ந்ததை சம்பந்தப்பட்டோர் மறந்துவிடக்கூடாது.

நகரப்பகுதி வர்த்தகர்களும் தாம் பாதுகாப்பு என்று கருதும் இடங்களுக்குத் தங்கள் உயிர் போன்ற பெறுமதிமிக்க தம் உடைமைகளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படாதது இத்தகைய வகைக்குள்தான் அடங்கும்.

இருதரப்புச் ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களுக்கு மத்தியில் 'வர்தகர்களின் உடைமைகளுக்கு ஒன்றும் நேராது; நாம் காப்பாற்றித் தருவோம்' என்று யாரும் உறுதி கூற முடியாது. அப்படி கூறினால் அது வெறும் கேலிக்கூத்தாகவே கருதப்படும். இந்தப் பின்னணியில் யாழ்.நகர வர்த்தகர்கள் தமது உடைமைகளைப் பாதுகாக்க எடுத்த முயற்சியை தடுத்து நிறுத்தியது கண்டிக்கத்தக்கது.

# அரசு - புலிகள் ஆகிய இரு தரப்புகளுடனும் பேசக்கூடிய ஒரே சக்தி இந்தியாதான்

**'இலங்கை இனப்பிரச்சினைத்தீர்வில் இந்தியா-நோர்வே நாடுகளின் பங்களிப்பு' என்னும் தலைப்பில் இந்திய வானொலியில் ஒலிபரப்பான கண்ணோட்டம் இது.**

சமாதானப்படையை அனுப்பி, தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க இந்திய அரசு தலையிட்ட பத்து வருடங்களின் பின்னர், வெளிநாடு ஒன்று - நோர்வே - தற்சமயம் இலங்கை விடயத்தில் தலையிட்டுள்ளது.

எனவே இந்தியா, இலங்கையின் விவகாரத்தில் தலையிட்டதன் மூலம் எதிர்கொண்ட பிரச்சினைகள், அதன் பலாபலன்கள் குறித்து நோர்வே அறியவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இலங்கையின் நிலைமை, தமிழ் மக்களின் அபிலாஷைகள், அவர்கள் எதிர்பார்க்கும் தீர்வு, இந்தப் பிரச்சினையைத் தீர்க்கக் கையாளப்படவேண்டிய வழிமுறைகள் என்பன தொடர்பான விவகாரங்களை முறைப்படி உணர்ந்த நாடு இந்தியாதான். உலகில் எந்த நாடும் இந்தியா அறிந்த அளவுக்கு அறிந்திருக்க வாய்ப்பு இல்லை.

இந்தியாவின் ஆலோசனைகள் மூலமே பிரச்சினையின் முழுப் பரிமாணத்தையும் எந்த நாடும் கிரகித்துக்கொள்ள முடியும்.

இந்தவகையில் சம்பந்தப்பட்ட விடயங்களை அறிந்து கொள்ளவே நோர்வே அரசின் ஆலோசகர் எரிக் சொலமன் இந்தியாவுக்கு விஜயம் செய்தார்.

இவர் ஏற்கனவே இலங்கையுடனும், விடுதலைப்புலிகளுடனும் பேச்சுக்கள் நடத்தியுள்ளார்.அதன் பின் அமெரிக்க அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினார்.

அதனைத் தொடர்ந்து அவர் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். இந்தியாவில் நான்கு மணி நேரம் தங்கியிருந்த அவர் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளார்.

"இந்திய அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களின் பலனாக பல விடயங்களை உணர்ந்து கொண்டேன்" என்று அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

"இலங்கை விவகாரத்துக்குத் தீர்வு காண்பது இலகுவான விடயம் அல்ல" என்று அவர் கூறியுள்ளார்.

இன்றுள்ள நிலையில் இலங்கையில் அமைதியான சூழ்நிலை ஏற்பட வேண்டுமாயின் இந்தியாவின் பங்களிப்பு அவசியமாகும்.

அதற்குக் காரணம், பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இரு தரப்புடனும் பேசக்கூடிய சக்தியாக விளங்குவது இந்தியாதான். இரு தரப்புக்குமிடையில் நிலவும் சந்தேகங்களையும், ஏமாற்றங்களையும் தீர்த்துப் பேச்சை முன்னேற்றக் கூடிய சக்தியாக இந்தியா விளங்குகிறது.

இந்தியாவில் விடுதலைப் புலிகள் தடை செய்யப்பட்ட அமைப்பாக இருக்கின்ற காரணத்தால், அந்த அமைப்புடன் இந்திய அரசு பேசமுடியாது.

எனினும் அரசில் அங்கம் வகிக்கும் தமிழகக்கட்சிகள் மற்றும் பிராந்தியக் கட்சிகள் விடுதலைப் புலிகளுடன் பேசக்கூடிய நிலையில் உள்ளன. அந்தக் கட்சிகளினால் புலிகளைப் பேச்சு மேசைக்குக் கொண்டுவரமுடியும்.

இந்தியாவால்தான் இரு தரப்புக்களுடனும் பேசமுடியும் என்பதால் பேச்சுக்கான முன்முயற்சியில் இந்தியாவின் பங்களிப்பு முக்கியமாக அமையப்போகின்றது.

# யாழ்.யுத்த நிலைமை குறித்து நாளை அரசியல் கட்சிகளுக்கும் விளக்கம்

## ஜனாதிபதி தலைமையில் அலரி மாளிகையில் கூட்டம்

யாழ்.குடாநாட்டு யுத்தநிலை தொடர்பாக சகல அரசியல் கட்சிகளுக்கும் விளக்கமளிக்கும் கூட்டமொன்றை நாளை திங்கட்கிழமை அரசு அலரி மாளிகையில் நடத்தவிருக்கின்றது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நடக்கும் இந்தக் கூட்டத்தில் ஒவ்வொரு கட்சியைச் சேர்ந்த இரு பிரதிநிதிகளைக் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தில் அரசு கடைப்பிடிக்கும் கொள்கைகள் தொடர்பாகவும்- எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் - இந்தக் கூட்டத்தில் விளக்கமளிக்கப்படவிருக்கிறது.

(உ-3-9)

# சொக்கோஸ்லாவாக்கியாவிலிருந்து இலங்கை ராணுவத்துக்கு டாங்கிகள்

கொழும்பு,மே14

இலங்கை அரசுப் படைகளுக்கு சொக்கோஸ்லாவாக்கியாவில் இருந்து டாங்கிகள் அவசர அவசரமாகக் கொள்வனவு செய்து கொண்டுவரப்படவுள்ளதாக படை உயர் வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இஸ்ரேலிடமிருந்து 'கிபிர்' குண்டுவீச்சு விமானங்களையும் - பாகிஸ்தானிடமிருந்து 24 கொள்கலன்களில் நவீனரக ஆயுதங்களையும் - இலங்கை அரசு கொள்வனவு செய்துள்ளதாகவும் அந்தச் செய்திகள் தெரிவித்தன.

கொள்வனவு செய்யப்பட்ட 'கிபிர்' விமானங்கள் தற்போது குடாநாட்டில் தாக்குதலில் ஈடுபட்டு வருவதாகவும் - பாகிஸ்தானிடம் கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங்களில் 122 மி.மீ. பல்குழல் எறிகணை செலுத்திகளும் நவீன ஆயுதங்களும் அடங்கும் எனவும் -அந்தச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

## கைதிகள் பரிமாற்றத்திற்கு அரசு தயார்

கொழும்பு,மே14

விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள படையினரை அவர்கள் விடுதலை செய்தால் அரசு தான் தடுத்து வைத்துள்ள விடுதலைப்புலி உறுப்பினர்களில் குறிப்பிட்டவர்களை விடுதலை செய்யத் தயார் என்று ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

யுத்தக் கைதிகளின் உறவினர்களுடன் தாம் நடத்திய கலந்துரையாடலின் போது ஜனாதிபதி இத்தகவலை வெளியிட்டார்.

(உ-3-8)

# கைதான இரு இளைஞர்களும் காங்கேசன் தடுப்பு முகாமுக்கு

யாழ்ப்பாணம்,மே14

தெல்லிப்பழை மற்றும் கொக்குவில் பகுதிகளில் இருந்து படையினரால் கைது செய்யப்பட்ட இரு இளைஞர்கள் காங்கேசன்துறை தடுப்பு முகாமுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக யாழ்.பொலீஸ் நிலையம் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்துக்கு நேற்று அறிவித்தது.

நவரட்ணம் ஜீவதாஸ் (கட்டுவன் கிழக்கு, தெல்லிப்பழை - வயது21), அரியகுட்டி தியாகராசா (கொக்குவில் கிழக்கு) ஆகிய இருவருமே காங்கேசன்துறைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் கடந்த 7ஆம் திகதி படையினரால் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

நவரட்ணம் ஜீவதாஸ் என்பவர் கைது செய்யப்பட்டமை தொடர்பாக அவர்களது உறவினர்களினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(உ-9)

# மந்திகை ஆஸ்பத்திரியில் மருந்துத் தட்டுப்பாடு

மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் மருந்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தற்போது இந்த ஆஸ்பத்திரியில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதனால் அவர்களுக்குச் சிகிச்சை அளிக்க அதிகளவில் மருந்துப் பொருள்கள் தேவைப்படுகின்றன.

யாழ்ப்பாணத்திலுள்ள மருந்துக் களஞ்சியத்திலிருந்து இந்த ஆஸ்பத்திரிக்குத் தேவையான மருந்துப் பொருள்களை அனுப்பிவைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விரைவில் அவை வந்துசேருமென எதிர்பார்க்கப்படுகிறது.

(உ-5-173)

## படைகளில் சேர பிரதியமைச்சர் தயார்

தற்போது நடைபெறும் யுத்த நடவடிக்கைகளில் தன்னையும் இணைத்துக் கொள்ளும் விதத்தில் தனது தகமைக்கு ஏற்ற பதவி ஒன்றை அரச படைகளில் தருமாறு கோரி திட்ட அமுலாக்கல், நாடாளுமன்ற விவகார பிரதி அமைச்சர் சாந்த பிரேமரட்ண ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

# உருளைக்கிழங்குடன் 'சஜிந்த' நேற்று வந்து சேர்ந்தது

வடமராட்சி,மே14

உருளைக்கிழங்கு உட்படப் பல அத்தியாவசியப் பொருள்களுடன் 'சஜிந்த' கப்பல் நேற்று காங்கேசன் துறை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

காங்கேசன்துறையில் தரித்துள்ள இக்கப்பல் பருத்தித்துறைக்குக் கொண்டுவரப்பட்டு முதலில் உருளைக்கிழங்குப் பெட்டிகள் இறக்கப்படவுள்ளன.

இதேவேளை ஏற்கனவே பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்துள்ள 'பொல்கொட்' கப்பலிலிருந்து சிமெந்து இறக்கப்படவுள்ளது.

'குமண' கப்பலிலிருந்து இறக்கப்பட்டு, ஊரடங்குச் சட்டம் காரணமாக யாழ்ப்பாணம் எடுத்துச் செல்ல முடியாத - அரச செயலகத்திற்குரிய - 25 லொறி நிவாரணப் பொருள்களும் பருத்தித்துறை சிவன் கோயில் கல்யான மண்டபத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

(உ-5-173)

# சாவகச்சேரி நகரப்பகுதியில் இளம் பெண் ஷெல்லுக்கு பலி

யாழ்ப்பாணம்,மே14

சாவகச்சேரிப் பகுதியில் நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் இளம் பெண் ஒருவர் பலியானார்; அவரது தந்தை காயமடைந்தார்.

சாவகச்சேரி ஆஸ்பத்திரி வீதியில் வசிக்கும் விஜயரட்ணம் யசோதா (வயது25) என்ற இளம் பெண்ணே பலியானவராவார்.

இச்சம்பவத்தில் காயமடைந்த இவரது தந்தையான வல்லிபுரம் விஜயரட்ணம் (வயது57) [illegible] டுள்ளார்.

(உ-5-173)

# 90ஆவது நாள் நினைவஞ்சலி

மலர்வு 11 - 01 - 1979



உதிர்வு 12 - 02 - 2000

## ரவீந்திரன் சுரேஸ்குமார்

(யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன்)

சுந்தர வதனத்தை அனுதினமும் பார்ப்போம்
அந்தரத்தில் அனைவரையும் ஏமாற்றிப்போனாயே
பந்தபாசத்தில் நொந்து தவித்து நிற்கின்றோம்
இந்தப் பிரபஞ்சத்தில் எப்போது உனைக் காண்போம்?

அன்னாரின் 90 ஆவது நாள் அந்தியேட்டிக் கிரியைகளிலும் சபிண்டீகரணத்திலும் மதிய போசனத்திலும் கலந்து அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு வேண்டுகின்றோம்.

துன்னாலை. (C/12105) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகரில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த இரண்டரை மணி நேரமும் மக்கள் தமக்குத் தேவையான பொருள்களை வாங்குவதில் மும்முரமாக ஈடுபட்டனர். ஆனால் நகரப் பகுதி வர்த்தகர்கள் தங்கள் வர்த்தக நிலையங்களில் இருந்து பொருள்களை வெளியேற்ற அனுமதிக்கப்படவில்லை.

அவ்வேளையில் கணிசமான எண்ணிக்கையான குடும்பங்கள் யாழ்.மாநகரசபைப் பிரதேசத்திலிருந்து பாதுகாப்பான பிற இடங்களுக்கு வெளியேறினர். (உ)

# மரண அறிவித்தல்கள்

## மார்க்கண்டு கந்தசாமி

சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு கந்தசாமி நேற்று (13-05-2000) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் இரத்தினம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மார்க்கண்டு - நாகம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்ற சதாசிவம், கனகரட்ணம், இராசதுரை, பொன்னம்மா, செல்லம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற கந்தசாமி, சண்முகதாஸன், பரமேஸ்வரி, மகேஸ்வரி, இராசலட்சுமி ஆகியோரின் மைத்துனரும், புவனேஸ்வரனின் அன்பு மாமனாரும் சரோஜா, சாந்தா, சிவபாலன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் பவிதாவின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14-05-2000) காலை 9 மணிக்கு வழுக்கையாறு மயானத்தில் நடைபெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

துணைவி,
வட்டுக்கோட்டை. (C/12108)

தகவல்:
இரத்தினம்மா
(மனைவி)

## மயில்வாகனம் அன்னலச்சுமி

வேலணை கிழக்கு 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மயில்வாகனம் அன்னலச்சுமி சனிக்கிழமை காலமானார். இவர் மயில்வாகனத்தின் அன்பு மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13-05-2000) நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

10, பொன்னப்பலேன்,
வண்ணார்பண்ணை, யாழ். (76148)

தகவல்:
பிள்ளைகள்

## திருமதி சேதுப்பிள்ளை கதிரேசு

தெல்லிப்பளை மேற்கு தையிட்டிப்புலத்தைப் பிறப்பிடமாகவும், பழைய தபால்கந்தோர் ஒழுங்கை, கோப்பாய் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சேதுப்பிள்ளை கதிரேசு அவர்கள் 11-05-2000 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமநாதர் கதிரேசு (சின்னத்துரை) அவர்களின் அன்பு மனைவியும் சுபாஸ், வேலாயுதநாதன் (உதவிக் கல்விப் பணிப்பாளர் - கணிதம், முல்லைத்தீவு வலயம்), கிருஷ்ணாதேவி (யாழ். மாவட்ட வெளிக்கள உத்தியோகத்தர், சி.க.கூ. சங்கங்களின் சமாசம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தேவகியின் அன்பு மாமியாரும் சுபாசினி, கௌதமன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (12-05-2000) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இல.6, 4ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

(76147)

தகவல்:
க.சுபாஸ் (மகன்)

## திருமதி அகிலேஸ்வரி அரசரத்தினம்

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த அகிலேஸ்வரி அரசரத்தினம் 10.05.2000 புதன்கிழமை காலமானார்.

அன்னார் இளைப்பாறிய அரச உத்தியோகத்தர் அரசரத்தினத்தின் அன்பு மனைவியும், வாசுதேவன்(பிரான்ஸ்), காலஞ்சென்ற மீனலோஜினி ஜெகநாதன் (லண்டன்), முரளீதரன் (தேசிய சேமிப்பு வங்கி, சாவகச்சேரி), திருமதி கீதாஞ்சலி ஜெகநாதன் (லண்டன்), செல்வி யசோதா அரசரத்தினம் (அ.த.க.பாடசாலை, ஈவினை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தாமோதரம்பிள்ளை, சிவசம்பு (கல்விப் பணிப்பாளர், முல்லைத்தீவு), காலஞ்சென்ற அகிலேஸ்வரன், திருமதி கமலாதேவி சதானந்தன், விமலாதேவி சர்வானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 10-05-2000 புதன்கிழமை புன்னாலைக்கட்டுவனில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C/12106)

தகவல்:
சி.அராசரத்தினம்
(கணவர்)

## கந்தவனம் அருளானந்தம்

(அரசு உபாத்தியாயர்)

அல்வாய் மேற்கு கந்தவனம் அருளானந்தம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) 10.05.2000 புதன்கிழமையன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தவனம் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் தங்கேஸ்வரியின் அன்புக் கணவரும், சாந்தினி (இலங்கை வங்கி, நெல்லியடி), சிறீதரன் (கனடா), சுகந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் செவ்வேள் (பருத்தித்துறை பிரதேச சபை), ரஜீதா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை(ஆசிரியர்) அவர்களின் அன்புச் சகோதரரும், ஆரூர்வேள், சுகனவேள் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 11-05-2000 வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றன.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பழமுதிர்சோலை,
அல்வாய் மேற்கு,அல்வாய். (C/12107)

தகவல்:
ந.செவ்வேள்

## திருமதி சிவானந்தம் யோகேஸ்வரி

(சென்ரல் எசன்ஸ் சப்பிளையர்ஸ், கண்டி)

கரம்பனைப் பிறப்பிடமாகவும் கண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவானந்தம் யோகேஸ்வரி 10.05.2000 அன்று கண்டியில் காலமானார்.

அன்னார் முத்துச்சாமி - சற்குணம் தம்பதியினரின் அன்பு மகளும் சின்னையா - இரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகளும் சிவானந்தத்தின் அன்பு மனைவியும் சிவானுஜன், சிவாஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும் சுவந்திராதேவி, ரோகினிதேவி, கந்தவேள்(பெட்டா எசன்ஸ் சப்பிளையர்ஸ் - கொழும்பு, யாழ்ப்பாணம்) சோமாஸ்கந்தா(பெட்டா எசன்ஸ் சப்பிளையர்ஸ் - கொழும்பு, யாழ்ப்பாணம்), சரோஜினிதேவி, தசிகாதேவி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று கண்டியில் நடைபெறும்.

32,கைலாசபிள்ளையார் கோயில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (C/12100)

தகவல்:
கதிரவேலு முத்துச்சாமி
(தந்தை).

## மன்னிப்புச் சபை கோரிக்கை

லண்டன்,மே14

யாழ். குடாநாட்டில் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இரு தரப்பும் மனிதாபிமானச் சட்டங்களுக்கு அமைய நடக்க வேண்டும்; மக்கள் பாதிக்கப்படாதவாறு மனிதாபிமான அடிப்படையில் செயற்பட்டு, மனிதஉரிமை விதிகளைப் பேணவேண்டும்.

- இப்படி சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது.

அரசின் புதிய பாதுகாப்புச் சட்ட விதிகள் நடைமுறைக்கு வந்தபின்னர் பொலீஸார் மற்றும் படையினர் கண்மூடித்தனமான கைதுகளை மேற்கொண்டு வருகின்றனர். இத்தகைய நடவடிக்கைகள் களையப்பட வேண்டும் - என்றும் அந்த அமைப்பு கோரியுள்ளது. (உ-8)

## அமெரிக்கா கண்டனம்

கொழும்பு,மே14

இலங்கையில் யுத்தச் செய்திகளுக்கு அரசு விதித்துள்ள தணிக்கையை அமெரிக்க அரசு கண்டித்துள்ளது.

ஜனநாயக உரிமையை மீறும் செயல் இது என்று அமெரிக்க ராஜாங்க அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## எல்லைப் படை வீரர் மரணம்

வவுனியா,மே14

மன்னாரில் கடந்த 3 ஆம் திகதி படையினருடன் ஏற்பட்ட எதிர்பாராத மோதலில் தமது தரப்பில் எல்லைப் படைவீரர் சூசைநாதன் என்பவர் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (உ-8)

## பேராதனையில் ராகிங்!

கொழும்பு,மே14

பேராதனைப் பல்கலைக்கழக புதுமுக மாணவர்களைப் பகிடிவதை செய்ததாகக் கூறப்படும் எட்டு சிரேஷ்ட மாணவர்களைக் கடந்த வியாழக்கிழமை பல்கலைக்கழக நிர்வாகம் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது. (உ-8)

## சடலம் கொழும்புக்கு

யாழ்ப்பாணம்,மே14

கோண்டாவில் சுடலையில் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்ட பெண்ணின் சடலம் மேலதிக மருத்துவ பரிசோதனைகளுக்காக நேற்று கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

பருத்தித்துறை வராத்துப் பளையைச் சேர்ந்த இராஜகாந்தன் சுஜாதா(வயது25) என்பவருடையது என அடையாளம் காணப்பட்ட அந்தச்சடலத்தில் பாலியல் வல்லுறவுக்கான அடையாளங்கள் இருப்பதால் அதனைக் கொழும்புக்கு அனுப்பி மேலதிக பரிசோதனைகளை மேற்கொள்ள நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது தெரிந்ததே.

## சித்த மருத்துவ மாணவன் கைது

யாழ்ப்பாணம்,மே14

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவபீட மாணவனான ரவிராஜ் என்பவர் இருபாலையில் வைத்துப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த மாணவனை விடுவிப்பதற்கான முயற்சிகளை எடுப்பது குறித்து யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் பல்கலைக் கழக நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டுள்ளது. (உ-3)

## மல்லாவியில் மறியற்போர்

வன்னி ஆஸ்பத்திரிகளுக்கு மருந்துப் பொருள்கள் அனுப்பப்படாததை ஆட்சேபித்து நேற்று முன்தினம் மாலை மல்லாவி ஆஸ்பத்திரிக்கு முன்னால் இரு மணிநேர மறியல் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

## உதவும்நாடுகளின் கூட்டம் ஒத்திவைப்பு

கொழும்பு,மே14

எதிர்வரும் 29 ஆம் திகதி பாரிஸில் நடைபெறவிருந்த - இலங்கைக்கான உதவி வழங்கும் நாடுகளின் - கூட்டம் தற்போதைய நாட்டு நிலைமை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது என அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். (உ-8)

### நெருக்கடி நேரம் உதவமறுத்த

## இந்திய உறவைத் துண்டிக்க கோருகின்றது "த ஐலண்ட்"

கொழும்பு,மே14

இலங்கையில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலையில் உதவிவழங்க மறுத்த இந்தியாவுடன் உறவுகளை வைத்திருக்கக் கூடாது. அதனைத் துண்டிக்க வேண்டும் என்று கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று அரசுக்கு ஆலோசனை கூறியுள்ளது.

நேற்று வெளியான 'த ஐலண்ட்' பத்திரிகையின் ஆசிரிய தலையங்கத்திலேயே இந்த ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

"பாகிஸ்தான், சீனா, இஸ்ரேல் ஆகிய நாடுகளே எமது உண்மையான நண்பர்கள். அவர்களிடம் உதவிகளைத் தாராளமாகப் பெற வேண்டும்" என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## இலங்கை யுத்தநிலைமை குறித்து இந்திய அமைச்சரவை ஆராய்வு

புதுடில்லி,மே14

இலங்கையில் நெருக்கடிக் கட்டத்தை அடைந்துள்ள யுத்த நிலைமை குறித்தும் அதனால் இந்தியாவுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் குறித்தும் இந்திய மத்திய அமைச்சரவை பிரதமர் வாஜ்பாய் தலைமையில் நேற்றுக் கூடியபோது விரிவாக ஆராய்ந்தது.

பாகிஸ்தானிடமிருந்து இலங்கை கொள்வனவு செய்துள்ள ஆயுதங்கள் தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் ஆரயப்பட்டதாக இந்தியத் தொலைக்காட்சி தெரிவித்தது.

பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் இலங்கை நிலைமை தொடர்பாக விரிவாக எடுத்து விளக்கினார்.

வெளிவிவகார மட்டத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங் விளக்கிக் கூறினார்.

இந்தக் கூட்டத்திற்கு முப்படைத் தளபதிகளும் அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-3-9-164)

## இந்திய இராணுவம் உன்னிப்பாக இலங்கை நிலையைக் கண்காணிப்பு

புடில்லி,மே14

இலங்கையில் தீவிரமடைந்து வரும் யுத்த நிலைமையை இந்திய இராணுவம் மிக உன்னிப்பாக அவதானித்து வருகின்றது என இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் வி.பி. மலிக் தெரிவித்திருக்கின்றார்.

இந்தியாவில் டோஹ்ரானிடூன் நகர இராணுவக் கல்லூரியில் நடைபெற்ற பொது நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கைக்கு ஆயுத விநியோகம் மேற்கொள்ளும் நாடுகள் குறித்து இந்தியா உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றது.

யுத்தத்துக்கு முகங்கொடுக்க பல நாடுகளில் இருந்தும் ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதில் இலங்கை அரசு தீவிர அக்கறை காட்டி வருகின்றது. எந்தெந்த நாடுகளில் இருந்து, என்னென்ன ரகமான ஆயுதங்களை இலங்கை கொள்வனவு செய்கிறது என்ற விவரங்களைச் சேகரிப்பதுடன் அவற்றைக் கண்காணித்தும் கொண்டிருக்கின்றோம் - என்றார். (உ-3-8)

## 30 வெளிநாட்டுத் தூதர்களுக்கு யுத்த நிலை குறித்து விளக்கம்

கொழும்பு,மே14

தற்போது வடக்கில் இடம்பெறும் யுத்தம் தொடர்பாக கொழும்பிலுள்ள முப்பது வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு வெளிவிவகார அமைச்சு விளக்கம் அளித்துள்ளது.

வெளிவிவகாரப் பதில் அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்லவே விளக்கத்தை அளித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள தேசிய நெருக்கடி நிலையில் பல நாடுகள் வழங்கிவரும் ஒத்துழைப்புக்காக அந்த நாடுகளுக்கு அவர் நன்றியையும் தெரிவித்தார்.

தூதர்களைத் தனித்தனியாகச் சந்தித்த அவர் நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைச் சமாளிக்க வெளிநாடுகள் வழங்க வேண்டிய உதவிகள் குறித்தும் பிரஸ்தாபித்தார். (உ-3-9)

## இந்திய - இலங்கை கடல் எல்லை தெளிவுபடுத்தும் அறிவிப்புப் பலகை

புதுடில்லி,மே14

இந்திய - இலங்கைக் கடல் எல்லையைக் குறிக்கும் அறிவிப்புப் பலகை நேற்று அறிவிக்கப்பட இருந்ததாக இராமேஸ்வரத்தில் உள்ள இந்திய கடற்படைத்துறைத் தலைமை அதிகாரி பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் இலங்கையில் இருந்து இந்தியாவுக்குவரும் அகதிகளின் பொறுப்பை யார் ஏற்பது என்பது தெளிவாக இருக்கும் என்றும்-

இதன்படி ஐந்தாவது தீவில் இந்திய எல்லை முடிவடைவதாகவும் -

இலங்கையில் இருந்து வரும் அகதிகள் இந்த எல்லைக்குள் வந்தால் மட்டுமே அவர்கள் இந்தியாவால் ஏற்றுக் கொள்ளப்படுவர் என்றும் -

அவர் சொன்னார்.

ஐந்தாவது தீவுக்கு அப்பால் விடப்படுபவர்களை இலங்கைத் தரப்புத்தான் கவனிக்க வேண்டும் என்றும் -

அவர் கூறினார். (உ-9-4)

## லொறி உரிமையாளர்களை இன்று வருமாறு அழைப்பு

யாழ்ப்பாணம்,மே14

யாழ். மாவட்டத்திலுள்ள லொறி உரிமையாளர்களைத் தமது லொறிகளுடன் கோண்டாவிலில் உள்ள அரச காரியாலயத்துக்கு இன்று காலை சமுகமளிக்குமாறு யாழ். செயலகத் திட்டப் பணிப்பாளர் செ.மகாலிங்கம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தற்பொழுது காங்கேசன் துறையில் தரித்துள்ள 'சஜிந்த' கப்பலில் ஏற்றிவரப்பட்ட உருளைக்கிழங்கு மற்றும் உணவுப் பொருள்கள் பருத்தித்துறையில் இறக்கப்படவுள்ளன.

இப்பொருள்களை கோண்டாவிலில் உள்ள அரச களஞ்சியத்துக்கு எடுத்துவருவதற்காகவே லொறிகளைக் கொண்டுவருமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ-5-9)

## சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினருக்கு

யாழ்ப்பாணம்,மே14

இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள பாடசாலைகளைச் சேர்ந்த சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவினரை தன்னுடன் தொடர்பு கொண்டு முதலுதவி மருந்துகளைப் பெற்று, அம்மக்களுக்கு உதவுமாறு சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் மாகாண ஆணையாளர் எஸ்.செல்வரஞ்சன் கேட்டுள்ளார். (உ-9)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14-05-2000இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org